அசல்வழக்கு எண் 6298/2021

தேதி 19.11.2024

பெயர் K. Ravi (PW-1)

<u>சாட்சி வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரிக்கப்படுகிறார்</u>

<u>குறுக்கு விசாரணை :-</u>

பிரதிவாதிக்கு நான் வாடகை கொடுத்ததாக சொல்லும் சொத்தை எப்போது வாங்கினேன் என்றால் 1976 ல் என் அப்பா அச்சொத்தை வாங்கினார். எனக்கு அந்த சொத்து எப்போது வந்தது என்றால் 2015 ல். பிரதிவாதி அச்சொத்தில் எந்த தேதி முதல் வாடகைதாரராக இருக்கிறார் என்றால் சொத்து என் அப்பா பெயரில் இருந்த போது அவர் வாடகைதாரராக வந்தார். என் அப்பாவிடம் பிரதிவாதி எவ்வளவு முன்பணம் கொடுத்தார் என்றால் ரூ 5 லட்சம். என் அப்பாவிடம் பிரதிவாதி எவ்வளவு வாடகை கொடுத்தார் என்றால் என்னால் உறுதியாக சொல்ல முடியாது, தோராயமாக ரூ 45000/- கொடுத்தார். என் பெயரில் சொத்து வந்த பிறகு நான் பிரதிவாதியிடம் நான் தான் சொத்தின் உரிமையாளர் என்னிடம் தான் வாடகை தர வேண்டும் என்று நான் எழுத்து மூலமாக தெரிவித்தேனா என்றால் தெரிவிக்கவில்லை. என் பெயரில் சொத்து மாறிய போது நான் பிரதிவாதியுடன் புது ஒப்பந்தம் போட்டேனா என்றால் போட்டேன். என்னிடம் காட்டப்படும் ஆவணம் என் அப்பா வாடகைதாரரிடம் போட்ட lease deed என்றால்

சரி. அது பி.வா.சா.ஆ 1 ஆகும். பி.வா.சா.ஆ 1 எந்த தேதி முதல் எந்த தேதி வரை போடப்பட்டுள்ளது என்றால் 2012 முதல் 7 ஆண்டுகளுக்கு போடப்பட்டுள்ளது. பி.வா.சா.ஆ 1ல் நான் சாட்சியாக கையொப்பம் போட்டுள்ளேன் என்றால் சரி. அதில் என் அப்பாவின் கையொப்பமும் இடம் பெற்றுள்ளது என்றால் சரி. வா.சா.ஆ 1 என்னால் போலியாக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அதில் உள்ள செந்தில்குமாரின் கையொப்பம் என்னால் போலியாக போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ஆவணம் நான் K.J. Saravanan என்ற வழக்குரைஞர் மூலம் பிரதிவாதிக்கு அனுப்பிய caveat petition என்றால் ஞாபகமில்லை. நான் என் வழக்குரைஞர் மூலம் பிரதிவாதிக்கு அனுப்பிய caveat petition எனக்கு ஞாபகமில்லை என்று வேண்டுமென்றே பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ஆவணம் நான் K.J. Saravanan என்ற வழக்குரைஞர் மூலம் 09.01.2021 ல் பிரதிவாதிக்கு அனுப்பிய அறிவிப்பு என்றால் சரி. அது பி.வா.சா.ஆ 2 ஆகும். என்னிடம் காட்டப்படும் ஆவணம் பி.வா.சா.ஆ 2க்கு அவர் வழக்குரைஞர் மூலம் பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றால் சரி. அது பி.வா.சா.ஆ 3 ஆகும். என்னிடம் காட்டப்படும் ஆவணம் நான் குடோனை பூட்டி சீல் வைத்து விட்டேன் என்று பிரதிவாதி ரிட் தாக்கல் செய்து அதில் என்னையும், என் அப்பாவையும் எதர்மனுதாரர்களாக குறிப்பிட்டுள்ளார் என்றும் அந்த நீதிப்பேரானையில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு என்றால் சரியல்ல. W.P.No. 2655/2021, 22.02.2021 ல் நீதிப்பேரானையில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்க்கவில்லை. இந்த

வழக்கில் அந்த நீதிப்பேரானையில் என் சார்பாக K.J. Saravanan வழக்குரைஞரை நான் நியமனம் செய்தேனா என்றால் செய்தேன். W.P.No. 2655/2021 ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு பி.வா.சா.ஆ 4 ஆகும். பி.வா.சா.ஆ 4 ல் உள்ள உத்தரவுப்படி நான் சீல் வைத்ததை திறக்க வேண்டும் அதை பிரதிவாதியிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் eviction செய்ய வேண்டும் என்றால் உரிமையியல் நீதிமன்றம் மூலம் தான் செய்ய வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. பிரதிவாதி 26.01.2021 ல் வழக்குரைஞர் மூலம் எனக்கும், என் அப்பாவுக்கும் அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றால் சரி. அந்த அறிவிப்பின் அலுவலக நகல் பி.வா.சா.ஆ 5 ஆகும். என்னிடம் காட்டப்படும் ஆவணம் நான் பிரதிவாதிக்கு என் வழக்குரைஞர் மூலம் 21.05.2021 அன்று அனுப்பிய சட்ட அறிவிப்பு என்றால் சரி. அது பி.வா.சா.ஆ 6 ஆகும். அதற்கு பிரதிவாதி 21.06.2021 ல் அவர் வழக்குரைஞர் மூலம் எனக்கு பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றால் சரி. அது பி.வா.சா.ஆ 7 ஆகும். வா.சா.ஆ 2 என்னால் தயார் செய்யப்பட்டது என்றால் என்னுடைய rental arrears என்ன உள்ளதோ அதை தான் குறிப்பிட்டுள்ளேன். அது அசல் ஆவணம் அல்ல என்றால் சரியல்ல. நான் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 65(B)ன் படி சான்றுதல் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. வா.சா.ஆ 6 ஐ வங்கியின் மேலாளர் authenticate செய்து கையொப்பம் போட்டு கொடுத்துள்ளாரா என்றால் மேலாளர் தான் அதை செய்து கொடுத்துள்ளார். வா.சா.ஆ 6 ல் வங்கி மேலாளர் authenticate செய்து

கொடுத்ததற்கான ஆதாரம் இல்லை என்றால் சரி. வா.சா.ஆ 7 மற்றும் 8 ல் வங்கி முத்திரை இல்லை என்றால் சரி. வா.சா.ஆ 7 மற்றும் 8 க்கு நான் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 65(B)ன் படி சான்றுதல் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. என் வங்கி கணக்கில் பிரதிவாதி எந்த தேதி வரை வாடகை எவ்வளவு தொகை செலுத்தியுள்ளார் என்றால் பிப்ரவரி 2020 வரை கொடுத்தார், மார்ச் 2020 வாடகை தொகையை மே 2020 ல் கொடுத்தார், TDS ல் 10% போக தோராயமாக ரூ 47000/- கொடுத்தார். வாடகை எவ்வளவு என்றால் தோராயமாக ரூ 51000/-. எனக்கு ரூ 51000/- ல் 10% TDS கழிக்கப்பட்டு சுமார் ரூ 47000/- கொடுக்கப்பட்டதா என்றால் சரி. பி.வா.சா.ஆ 2 படி பாக்கி நிலுவைத் தொகை ரூ 1 கோடியே 75 லட்சத்து 32,400/- பிரதிவாதி தர வேண்டும் என்று அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றால் அனுப்பியுள்ளேன் ஆனால் அதில் உள்ள தொகை தவறு. நான் பிப்ரவரி 2020, மார்ச் 2020 வரை பிரதிவாதி வாடகை கொடுத்ததாக சொல்லியுள்ளதால் நான் பிரதிவாதியிடம் வாடகை இவ்வளவு தர வேண்டும் வாடகை குறைவாக தருகிறீர்கள் என்று எழுத்து மூலமாக கடிதம் கொடுத்தேனா என்றால் கொடுக்கவில்லை, அதற்கு அவசியமில்லை. நான் பிரதிவாதிக்கு வாடகைக்கு கொடுத்த கடைக்கு அருகில் மது அருந்துகிற இடம் உள்ளது என்றால் சரி. அதனால் எனக்கு காவல் துறையில் அதிக செல்வாக்கு உள்ளது என்றால் சரியல்ல. அதனால் காவல் துறையின் உதவியுடன் 06.01.2021 ல் மதியம் 1 மணிக்கு நான், என் அப்பா மற்றும் ரவுடிகளுடன் வந்து கடையை பூட்டி சீல் வைத்துவிட்டேன் என்றால் சரியல்ல. அந்த கடையில் ரூ 40 லட்சம் மதிப்புள்ள

paper stock இருந்தது என்றால் பேப்பர் இருந்தது அதன் மதிப்பு தெரியாது. பிரதிவாதியின் கடைக்கு வெளியே நின்ற மினி லாரி டாட்டா 407, TN 22BM 4313, 3 டன் கொள்ளவு கொண்ட சரக்குடன் வந்த லாரியை கைப்பற்றி நான் என்னுடைய சுவாதினத்தில் வைத்துக் கொண்டேன் என்றால் சரியல்ல. நான் அந்த லாரியை பிரதிவாதி எடுக்கவிடாமல் டயர்களை பஞ்சர் செய்துவிட்டேன் என்றால் சரியல்ல. நான் மேற்கண்டவாறு செய்ததற்கு பிரதிவாதி ஆயிரம் விளக்கு காவல் நிலையத்தில் புகார் அளித்த போது என்னுடைய செல்வாக்கினால் காவலர் என் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. காவலர் மறுநாள் பிரதிவாதியின் இரண்டு பணியாட்களை காவல் நிலையத்தில் சட்டத்திற்கு முரணாக காலை முதல் மாலை வரை இறுக்க வைத்தனர் என்றும் பிரதிவாதி குடோனை காலி செய்தால் தான் வெளியே விடுவேன் என்று காவல் நிலைய ஆய்வாளர் சொன்னார் என்றால் சரியல்ல. காவலர் எவ்வித நடவடிக்கையும் எடுக்காததால் பிரதிவாதி 16.01.2021 அன்று DGP, காவல் ஆணையாளருக்கும் புகார் கொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்த வழக்குரையில் என் அப்பா தான் அந்த குடோனின் உரிமையாளர் என்றும் அவர் மூலம் தான் பிரதிவாதி வாடகைதாரராக வந்தார் என்றும் நான் 2015ல் தான் குடோனின் உரிமையாளரானேன் என்று சொல்லவில்லை என்றால் சரி. நான் வேண்டுமென்றே என் அப்பா மூலம் பிரதிவாதி வாடகைதாரராக வந்தார் என்பதை மறைத்துவிட்டேன் என்றால் சரியல்ல. நான்

வா.சா.ஆ 1 ஐ மோசடியாக தயார் செய்ததால் தான் மேற்கண்ட விவரத்தை மறைத்துவிட்டேன் என்றால் சரியல்ல. நான் ரூ 5,32,396/- எப்படி கணக்கிட்டேன் என்ற விவரத்தை வழக்குரையிலும், பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரி. நான் என் அப்பா போட்ட lease agreement ஆன பி.வா.சா.ஆ 1 ஐ மறைத்துவிட்டேன் என்றால் சரியல்ல. நான் பிராதில் பி.வா.சா.ஆ 2, 3,4,5 குறித்து எதுவும் சொல்லவில்லை என்றால் சரி. நான் வா.சா.ஆ 6 ல் 2015 முதல் உள்ள கணக்கு குறிப்புகளை தாக்கல் செய்யவில்லை என்றால் சரி.

(வழக்குரைஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)